பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 07 2024 MONDAY 7 15 PM

வணக்கம், ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தொழில்துறையின் வளர்ச்சி 9 புள்ளி ஐந்து சதவீதமாக உள்ளது என்று பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளதை இந்த ஆய்வறிக்கை எடுத்துரைத்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- எட்டாவது ஊதியக்குழுவை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து, தமிழக எல்லை பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
- இலங்கைக்கு எதிரான கிரிக்கெட் போட்டி தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி, கொழும்பு சென்றடைந்தது.

>>>><<<<

தொழில்துறையின் வளர்ச்சி 9 புள்ளி ஐந்து சதவீதமாக உள்ளது என்று நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இந்த ஆய்வறிக்கையை தாக்கல் செய்தார்.

அனைத்து நிலைகளிலும் தொழில்துறை வளர்ச்சி கண்டு வருவதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் துறையின் வளர்ச்சிக்கு ஐந்து அம்ச கொள்கை வகுக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூகநலத் திட்டங்களுக்கான செலவு, 23 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளதாகவும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு தொடங்கி நடப்பாண்டு வரை சமூகநலத் திட்டங்களுக்கான செலவு, ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தில் 12 புள்ளி எட்டு சதவீதம் அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளதை இந்த ஆய்வறிக்கை எடுத்துரைத்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தமது தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளின் வெற்றியை இது உணர்த்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான அம்சங்களும் இந்த ஆய்வறிக்கையில் இடம்பெற்றுள்ளதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>><<<<

மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இன்று இறுதி செய்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இதுதொடர்பான கூட்டத்தில், நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நடப்பு நிதியாண்டிற்கான இந்த பட்ஜெட்டை, திருமதி. நிர்மலா சீதாராமன் நாளை மக்களவையில் தாக்கல் செய்து, உரையாற்றுகிறார்.

இதனை அகில இந்திய வானொலி நேரடியாக ஒலிபரப்பு செய்கிறது.

இதன் காரணமாக, மதியம் 12.40 மணிக்கான ஆகாஷவாணி செய்தி அறிக்கை பிற்பகல் 1.50-க்கு ஒலிபரப்பாகும்.

திருச்சியிலிருந்து ஒலிபரப்பாகும் மாநில செய்தி அறிக்கை, பிற்பகல் மணி 1.45-க்கு பதிலாக பிற்பகல் 3 மணிக்கு ஒலிபரப்பாகும்.

பட்ஜெட் குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு, சென்னை அகில இந்திய வானொலியின் செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

நாளை இரவு எட்டரை மணிக்கு நேரலையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியில், பொருளாதார நிபுணர் கௌரி, பத்திரிகையாளர் ஜெகந்நாதன் மற்றும் ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கின்றனர்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>><<<<

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் 11 கோடியே 75 லட்சம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக நீர்வளத்துறை இணையமைச்சர் திரு. சோமண்ணா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வருவதற்கு முன்னர், ஊரகப் பகுதிகளில் 3 கோடியே 23 லட்சம் குடியிருப்புகள் மட்டுமே, குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வசதியினை கொண்டிருந்ததாக குறிப்பிட்டார்.

தற்போது 75 சதவீத ஊரக குடியிருப்புகளுக்கு இந்த வசதி கிடைத்திருப்பதாக அமைச்சர் கூறினார்.

>>>><<<<

விஷ்வகர்மா திட்டத்தின் கீழ், 2 கோடிக்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள் பதிவு செய்துள்ளதாக திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

>>>><<<<

சிவில் விமான போக்குவரத்து துறையில் பயிற்சி பெற்ற பொறியாளர் பற்றாக்குறை இல்லை என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், விமான மேலாண்மை பொறியியல் படிப்புகளை வழங்க 57 நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இதன்மூலம் வருடத்திற்கு 3 ஆயிரத்து 700 பேர் பயிற்சி பெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

நாட்டில் வேலைவாய்ப்பின்மை குறைந்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் Shoba Karandlaje கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், வேலைவாய்ப்பின்மை குறைந்துள்ளதற்கான புள்ளி விவரங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

>>>><<<<

பல்வேறு நெறிமுறைகளை பின்பற்றியே மாநில அரசுகளுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி, தேசிய மேம்பாட்டு குழுமம் தான், மாநில அரசுகளுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்குவதாக குறிப்பிட்டார்.

பீகாருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று 2012ஆம் ஆண்டு விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எட்டாவது ஊதியக்குழுவை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் திரு. பங்கஜ் சௌத்ரி தெளிவுபடுத்தினார்.

>>>><<<<

சுற்றுலா துறையில் தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்த அவர், சுற்றுலா துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இது, சுற்றுலா துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

ஒலிம்பிக் போட்டிக்கான தயார்நிலை குறித்த விவாதம் மக்களவையில் இன்று தொடங்கியது.

பிஜேபி உறுப்பினர் திரு. சஞ்சய் ஜெய்ஸ்வால் விவாதத்தை தொடங்கி வைத்து பேசினார்.

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிகாக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

விளையாட்டுத்துறைக்கான நிதி ஒதுக்கீடும், பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு ஆயிரத்து 219 கோடி ரூபாய் விளையாட்டுத்துறைக்கு ஒதுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது, இது 3 ஆயிரத்து 397 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற நோக்கில் 470 கோடி ரூபாய் செலவில் 16 விளையாட்டுப் பிரிவுகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்பவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. சஞ்சய் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. Deepender Singh Hooda விளையாட்டுத்துறை அரசியலுக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும் என்று கூறினார்.

>>>><<<<

கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து, தமிழக எல்லை பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வாலையாறு, வேலந்தாவளம், மாங்கரை, மீனாட்சிபுரம் உள்ளிட்ட 11 சோதனைச் சாவடிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ஹரிகரன் 47 செகண்ட்ஸ்)

>>>><<<<

குஜராத், கோவா, மத்தியப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

சத்திஷ்கர், ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட், ராஜஸ்தான், ஹரியானா, தில்லி மற்றும் உத்தரபிரதேசத்திற்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரிநீர் காரணமாக, ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர் வரத்து 77 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

இலங்கைக்கு எதிரான கிரிக்கெட் போட்டி தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி, கொழும்பு சென்றடைந்தது.

இலங்கைக்கு எதிராக மூன்று டிவென்டி டிவென்டி மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா பங்கேற்கிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி வரும் சனிக்கிழமை, Pallikele-ல் நடைபெறவுள்ளது.

>>>><<<<

கென்யா சர்வதேச ஜூனியர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Harithashree பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 6-4, 6-4 என்ற செட்கணக்கில், துனிஷியாவின் Dicene Benzaied-ஐ வென்றார்.

>>>><<<<

ஸ்விஸ் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி, பிரான்ஸின் Albano Olivetti இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 3-6, 6-3, 10-6 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Fabrice Martin-Ugo Humbert இணையை வென்றது.

>>>>END<<<<